# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்


## பாடம் 7: வைக்கோலின்றி, செங்கற்கள்

**யாத்திராகமம் 4:29-5:19**

### நடந்த கதை . . .

இஸ்ரவேல் மக்களை விடுதலைசெய்யும்படிச் சொல்ல எகிப்தின் ராஜாவிடம் செல்வதற்குமுன் மோசேயும் ஆரோனும் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலின் தலைவர்களைச் சந்தித்தார்கள். அப்போது, கர்த்தருக்கென்று மக்கள் தங்களைப் பரிசுத்தம் பண்ணும்படி சொன்னார்கள்; தேவன் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பார் என்று கூறினார்கள்.

வாரத்தில் ஏழு நாட்களும் வேலைசெய்யும்படி கடுமையான வேலைப்பளுவை இஸ்ரவேலர்மேல் எகிப்தியர் சுமத்தியிருந்தார்கள். மோசே அவர்களைச் சந்தித்தபிறகு, ஏழாம்நாளில் ஓய்ந்திருக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அதனால் வெகுண்டெழுந்த பார்வோன் மோசேயிடமும் ஆரோனிடமும், 'அவர்கள் சுமைசுமக்கிறதை விட்டு ஓய்ந்திருக்கும்படி செய்கிறீர்களே' என்றான். யாத் 5:5. (இங்கு 'இளைப்பாறுதல்' என்பதற்கான எபிரெயச் சொல் 'சபாத்'; 'ஓய்வுநாளில் ஓய்ந்திருக்கும்படி செய்கிறீர்களே' என்று சொன்னான்).



கோபங்கொண்ட மன்னன், அந்த அடிமை நாட்டினரை தன் கட்டுப்பாட்டிற்குள் வைக்க, தீவிர நடவடிக்கை எடுக்க நினைத்தான்; அவர்களுக்கு வேலைச் சுமையை இன்னும் அதிகரித்து, தேவனைத் தொழுவதை அவர்கள் நினைக்காதபடிச் செய்ய எண்ணினான்.

'செங்கல் வேலைக்கு நீங்கள் முன்போல இனி ஜனங்களுக்கு வைக்கோல் கொடுக்கவேண்டாம்; அவர்கள் தாங்களே போய்த் தங்களுக்கு வைக்கோல் சேர்க்கட்டும். அவர்கள் முன்செய்துகொடுத்த கணக்கின்படியே செங்கல் செய்யும்படிச் சொல்லுங்கள்; அதிலே நீங்கள் ஒன்றும் குறைக்க வேண்டாம்' என்றான். யாத் 5:7,8.

மோசேயின் நாட்களில் நடந்ததுபோலவே, தேவன் தம் மக்களுக்கு மகத்தான காரியங்களைச் செய்யப்போகிறார். சீக்கிரமே பாவ அடிமைத்தனத்திலிருந்து அவர்கள் விடுதலையாக்கப்பட்டு, பரம கானானுக்குச் செல்லப்போகிறார்கள்.

மீண்டும் ஒருமுறை, ஓய்வுநாளின் இளைப்பாறுதல் முக்கியம் என்பதை மக்களின் மனதில் உணர்த்த தேவன் இப்போது முயன்றுகொண்டிருக்கிறார்.

## ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. தேவன் ஓய்வுநாளின் இளைப்பாறுதலை இஸ்ரவேலருக்கு மாத்திரம்தான் கொடுத்தாரா?**

**மாற்கு 2:27.** *மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் ________________ உண்டாக்கப்பட்டது.*

**குறிப்பு:** ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டதென்று இயேசு கூறினார். 'மனுஷன்' எனும் வார்த்தை எல்லா இடத்திலும், எல்லாக் காலத்திலும் உள்ள அனைத்து 'மக்களினத்தையும்' சுட்டிக்காட்டும்.

**2. தேவன் எப்போது ஓய்வுநாளை ஏற்படுத்தினார்?**

**ஆதியாகமம் 2:1-3.** *இவ்விமாக வானமும் பூமியும், அவைகளின் சர்வசேனையும் ________________ தீர்ந்தன ... தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம்நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.*

**குறிப்பு:** சிருஷ்டிப்பு வாரத்தின் இறுதியில்தான் ஓய்வுநாள் ஏற்படுத்தப்பட்டது.

**3. வாரத்தின் எந்த நாள் ஓய்வுநாள்?**

**ஆதியாகமம் 2:1-3.** *தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ________________ நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு, ________________ ஓய்ந்திருந்தார் ... தேவன் ________________ ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.*

**குறிப்பு:** சிருஷ்டிப்பு வாரத்தின் ஏழாம்நாளைத் தாம் ஓய்வுநாளாக உண்டாக்கினதாக ஆதியாகமம் 2ம் அதிகாரத்தில் மூன்று இடங்களில் இயேசு கூறுகிறார். அதை அவர் 'பரிசுத்தப்படுத்தினார்'. அதாவது, 'பரிசுத்த நோக்கத்திற்காக அதைப் பிரித்துவைத்தார்'. 24 மணி நேரக் காலக்கட்டம் கொண்டதாக ஓய்வுநாளை தேவன் உண்டாக்கினார்; ஏனென்றால், இயேசுவோடு ஓர் உண்மையான உறவை உண்டாக்க நேரம் செலவிடவேண்டியது அவசியம். எகிப்தின் பார்வோனைப் போல பிசாசும், தேவனைப்பற்றிய நினைப்பே எழாதபடி நம்மை எப்போதும் வேலையில் மூழ்கியிருக்கச் செய்ய விரும்புகிறான். கடைசிக்காலத்தில் மக்கள் எந்நேரமும் எவ்வாறு பரபரப்பாக இருப்பார்களென்று தேவனுக்குத் தெரியும். அதனால்தான், தம் மக்களோடு நேரம் செலவிட்டு, அவர்களிடம் பழகுவதற்கு வாரத்தில் 24 மணி நேரத்தை அவர் பிரித்துவைத்திருக்கிறார். வாரத்தின் ஒரு நாளில் உங்களைச் சந்திக்க நேரம் ஒதுக்கியுள்ளார்; அவரைச் சந்திக்காமல் இருக்காதீர்கள்.

**4. தேவன் தம்முடைய பரிசுத்த ஓய்வுநாளின் முக்கியத்துவத்தை எவ்வாறு எடுத்துக்காட்டினார்?**

**யாத்திராகமம் 20:8-11.** *ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ________________ நினைப்பாயாக ... கர்த்தர் ஓய்வுநாளை ________________, அதைப் பரிசுத்தமாக்கினார்.*

**குறிப்பு:** தேவ பிரமாணத்தின் நான்காம் கட்டளை யாத் 20:8–11 இல் உள்ளது. பத்துக்கற்பனைகளில் ஓய்வுநாள் கற்பனையும் ஒன்றாக இருப்பதால், அது எவ்வளவு முக்கியமானது என்பதை தேவன் வலியுறுத்திகிறார். 'உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்' என்று வசனம் 10 கூறுகிறது. ஓய்வுநாளை மக்கள் மறந்துவிடுவார்கள் என்று தேவனுக்குத் தெரிந்திருந்ததால்தான், நான்காம் கற்பனையை மாத்திரம் 'நினைப்பாயாக' என்று ஆரம்பிக்கிறார். தேவனுடைய பத்துக் கற்பனைச் சட்டத்தை மீறுவது பாவம். 1 யோவான் 3:4. மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்தும், சட்டத்தை மீறுவதிலிருந்தும் இரட்சிக்கவே கிறிஸ்து மரித்தார். மத்தேயு 1:21.



**5. ஓய்வுநாளானது ஈடுஇணையில்லா என்ன இரு காரியங்களுக்கு அடையாளமாக இருப்பதாக தேவன் சொன்னார்?**

**யாத்திராகமம் 31:17.** *அது (ஓய்வுநாள்) என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறுநாளைக்குள்ளே ________________ வானத்தையும் பூமியையும் ________________.*

**எசேக்கியேல் 20:12.** *நான் தங்களைப் ________________ கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன்.*

**குறிப்பு:** தம்முடைய சிருஷ்டிப்பு வல்லமைக்கும், மீட்பின் வல்லமைக்கும் ஓர் அடையாளம் அல்லது முத்திரைதான் ஓய்வுநாள் என்று தேவன் சொல்கிறார். 'பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும்' (வச 6) அறிவிக்கவேண்டிய மூன்று முக்கியச் செய்திகளை வெளி 14:6–14 இல் தேவன் கொடுக்கிறார். முதல் செய்தி வச 7 இல் உள்ளது. "தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள்" என்று கூறினான். வெளிப்படுத்தல் 14:7. மெய்யான தொழுகைக்குத் திரும்பும்படியான இந்த அழைப்பு நான்காம் கற்பனையிலிருந்துதான் கொடுக்கப்படுகிறது. 'கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்.' யாத்திராகமம் 20:11.

**6. இயேசு பரிசுத்தமாக ஆசரித்த நாள் எது?**

**லூக்கா 4:16.** *தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய ________________ ஓய்வு நாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார்.*

**குறிப்பு:** ஓய்வுநாளைக் கைக்கொள்வது உட்பட ஒவ்வொரு விஷயத்திலும் இயேசுதான் நம் முன்மாதிரி. 1பேதுரு 2:21. ஓய்வுநாளைக் கைக்கொள்வது அவருடைய வழக்கமாக இருந்தது. அதாவது அவர் அதைத் தொடர்ந்து கைக்கொண்டுவந்தார். இயேசு வாழ்ந்ததுபோலவே கிறிஸ்தவர்கள் வாழவேண்டும். 1 யோவான் 2:6.

**7. ஓய்வுநாளில் பவுலின் வழக்கம் என்னவாக இருந்தது?**

**அப்போஸ்தலர் 17:2.** *பவுல் ________ ________________ அவர்களிடத்தில்போய், மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்(தார்).*

**அப்போஸ்தலர் 18:4.** *________________ அவன் ஜெபஆலயத்திலே சம்பாஷணைபண்ணி, யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்திசொன்னான்.*

**குறிப்பு:** ஏழாம் நாள் ஓய்வுநாளைக் கைக்கொள்வது பவுலுக்கும் வழக்கமாக இருந்தது.

**8. ஓய்வுநாளில் அப்போஸ்தலர்கள் புறஜாதியாரோடும் கூடி ஆராதித்தார்களா?**

**அப்போஸ்தலர் 13:42.** *அவர்கள் யூதருடைய ஜெபஆலயத்திலிருந்து புறப்படுகையில், அடுத்த ________________ இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று ________________ வேண்டிக்கொண்டார்கள்.*

**குறிப்பு:** வேறொரு சமயத்தில், புறஜாதிப் பெண்கள் சிலரும் சீடர்களும் ஓர் ஆற்றண்டையில் கூடி, ஓய்வுநாளில் ஆராதனைசெய்தார்கள்; ஏனென்றால் அந்தப் பட்டணத்தில் ஜெபாலயம் இல்லாதிருந்தது. அப்போஸ்தலர் 16:13.

**9. மக்களின் பாவங்களுக்காகத் தாம் மரித்தபின்னரும் அவர்கள் ஓய்வு நாளைக் கைக்கொள்ளவேண்டுமென்று இயேசு விரும்பினாரா?**

**மத்தேயு 24:20.** *நீங்கள் ஓடிப்போவது மாரிக்காலத்திலாவது, ________________, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்.*

**குறிப்பு:** எருசலேம் நகரம் அழிந்துபோகுமென இயேசு இங்கு முன்னுரைக்கிறார். கி.பி 70 இல் (40 வருடங்களுக்குப் பிறகு அந்நகரம் அழியுமென்பது இயேசுவுக்குத் தெரியும். ஆனாலும் எதிரிகள் வரும்போது, ஓய்வுநாளில் அவர்கள் தப்பியோடவேண்டிய நிலை ஏற்படாதவாறு ஜெபிக்கும்படிச் சொன்னார். தம்முடைய மரணத்திற்குப் பிறகும்கூட தம் மக்கள் ஓய்வுநாளைக் கைக்கொள்ள வேண்டுமென்று இயேசு எதிர்பார்த்தார்.

**10. கடைசிக்கால தேவபிள்ளைகளும் ஏழாம்நாள் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிப்பார்கள் என்று வேதாகமம் கூறுகிறதா?**

**வெளிப்படுத்தல் 12:17.** *அப்பொழுது வலுசர்ப்பமானது (பிசாசு) ஸ்திரீயின்மேல் (சபை) கோபங்கொண்டு, தேவனுடைய ________________ ________________, இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான (பிள்ளைகளான) மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று.*

**வெளிப்படுத்தல் 14:12.** *தேவனுடைய ________________ ... ________________ கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்.*

**வெளிப்படுதல் 22:14.** *ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் ________________ அவருடைய கற்பனைகளின்படி ________________ பாக்கியவான்கள்.*

**குறிப்பு:** மேலுள்ள வசனங்கள் தேவனுடைய கடைசிக்காலச் சபையைச் சுட்டிக்காட்டுகின்றன. தேவனுடைய கடைசிக்காலச் சபை அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுமென்று வசனம் தெளிவாகக் கூறுகிறது. நான்காம் கற்பனையாகிய ஓய்வுநாளும் அதில் அடங்கும்.

**11. இரட்சிக்கப்பட்டு, பரலோகம்செல்லும் அனைவரும் ஓய்வுநாளைக் கைக் கொள்வார்களா?**

**ஏசாயா 66:23.** *நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதியபூமியும் எனக்கு முன்பாக நிற்பதுபோல, உங்கள் சந்ததியும், உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 66:22. அப்பொழுது: ... ஓய்வுநாள்தோறும், ________________ ________________ எனக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.*

**குறிப்பு:** மனிதர்களில் தேவனுடைய மீட்பைப் பெற்ற அனைவரும் புதிய வானம், புதிய பூமியில் ஒன்றாகச் சேர்ந்து தேவனுடைய ஓய்வுநாளைக் கைக்கொள்வார்களென்று வேதாகமம் கூறுகிறது.

**12. இப்போது வாரத்தின் ஏழாம்நாளாக இருக்கும் நாளைத்தான் (சனிக்கிழமை) இயேசு பரிசுத்த ஓய்வுநாளாக ஆசரித்தார் என்று நாம் நிச்சயமாகச் சொல்லமுடியுமா?**

**லூக்கா 23:54–லூக்கா 24:1.** *அந்த நாள் ஆயத்தநாளாயிருந்தது (வெள்ளிக்கிழமை); ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று ... அவருடனேகூட வந்திருந்த ஸ்திரீகளும் பின்சென்று, ... திரும்பிப்போய் கந்தவர்க்கங்களையும் பரிமளதைலங்களையும் ஆயத்தம்பண்ணி, கற்பனையின்படியே ________________ ________________. வாரத்தின் ________________ அதிகாலையிலே ... கல்லறையினிடத்தில் வந்தார்கள்.*



**குறிப்பு:** ஓய்வுநாளுக்கு முந்தின நாளான வெள்ளிக்கிழமையில் (ஆயத்தநாள்) இயேசு சிலுவையில் அறையப்பட்டார். மாற்கு 15:42. கற்பனையின்படி, ஓய்வுநாளில் இயேசு கல்லறையில் ஓய்ந்திருந்தார் (லூக்கா 23:56); ஓய்வுநாளுக்கு அடுத்த நாளான முதல் நாளில் உயிரோடு எழுந்தார். மாற்கு 16:1–6. உலகம் முழுவதிலும் உள்ள கிறிஸ்தவர்கள் இன்றும் அந்த நாளை ஈஸ்டர் ஞாயிறாகக் கொண்டாடுகிறார்கள். வெள்ளிக்கிழமைக்குப் பிறகும், ஞாயிற்றுக்கிழமைக்குமுன்னும் வரும் நாள்தான் ஓய்வுநாள் என்று வேதாகமம் தெளிவாகச் சொல்கிறது. வாரத்தின் அந்த நாள் எதுவென்று நாம் எந்தக் காலண்டரிலும் பார்த்து அறிந்துகொள்ளலாம். ('அகராதி என்ன சொல்கிறது'; 'காலண்டர்' மாற்றப்படவில்லையா?' எனும் சிறப்பு ஆராய்ச்சிப் பகுதியை வாசியுங்கள்).

**13. யாராவது தம்முடைய பரிசுத்த நாளை மாற்றுவதற்கு தேவன் அனுமதிப்பாரா?**

**நீதிமொழிகள் 30:5,6.** *தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள் ... அவருடைய வசனங்களோடு ஒன்றையும் ________________, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய்.*

**குறிப்பு:** உபாகமம் 5 இல் பத்துக் கற்பனைகளை தேவன் கொடுப்பதற்குமுன், அவற்றிலிருந்து யாரும் எதையும் 'கூட்டவும்வேண்டாம்' அல்லது 'குறைக்கவும்வேண்டாம்' என்று எச்சரித்தார். உபாகமம் 4:2. தேவன் கொடுத்ததுபோலவே அவர்கள் அதைக் கைக்கொள்ளவேண்டியிருந்தது. தேவன் தம்முடைய ஓய்வுநாளை ஆசீர்வதித்தார். (யாத் 20:11). அவர் ஒன்றை ஆசீர்வதித்தால், அது என்றென்றும் ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கும். 1 நாளாகமம் 17:27. 'என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்' என்று தேவன் சொல்கிறார். சங்கீதம் 89:34. தவறாக வழிகாட்டப்பட்ட சிலர், தாங்கள்தாம் தேவனுடைய பரிசுத்த ஓய்வுநாளை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றினதாக ஒத்துக்கொள்கிறார்கள். தேவன் வேதாகமத்தை நமக்கு வழிகாட்டியாகக் கொடுத்திருக்கும்போது மனிதரின் போதனைகளை அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**14. ஓய்வுநாள் எப்போது ஆரம்பிக்கிறது? எப்போது முடிகிறது?**

**லேவியராகமம் 23:32.** ________________ *துவக்கி, மறுநாள்* ________________ *உங்கள் ஓய்வை ஆசரிக்கக்கடவீர்கள்.*

**மாற்கு 1:32.** *சாயங்காலமாகிச்* ________________ ________________.

**குறிப்பு:** ஓய்வுநாளின் நேரம், வெள்ளிக்கிழமை சூரிய அஸ்தமனத்தின்போது ஆரம்பிக்கிறது; சனிக்கிழமை சூரிய அஸ்தமனத்தோடு முடிவடைகிறது.

**15. வெளிப்படுத்தல் 1:10 சொல்லும் கர்த்தருடைய நாள் எந்த நாள்?**

**யாத்திராகமம் 20:10.** *ஏழாம்நாளோ உன் தேவனாகிய ________________ ஓய்வுநாள்.*

**ஏசாயா 58:13.** ________ ________________ ________________ *உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கு.*

**மாற்கு 2:28.** *ஆகையால் மனுஷகுமாரன் ________________ ஆண்டவராய் இருக்கிறார் என்றார்.*

**குறிப்பு:** பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் கர்த்தருடைய நாளென்று ஓய்வுநாளை ஆண்டவர் குறிப்பிடுகிறார். தேவனுடைய ஓய்வுநாளை அவமதிக்கும் பாவத்தை மக்கள் செய்யாதபடி, அவர்களை எச்சரிக்கவேண்டுமென்றும் அவர் கட்டளையிடுகிறார். ஏசாயா 58:1,13. தேவனுடைய பரிசுத்த ஓய்வுநாள் அனைவருக்கும் உரியதென்று அவர் சொல்லியிருக்கிறார். ஏசாயா 56:2–7. ஞாயிற்றுக்கிழமை கர்த்தருடைய நாளென்று வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. வாரத்தின் ஆறு வேலைநாட்களில் அதுவும் ஒன்று. எசேக்கியேல் 46:1. எப்போதும் அது அப்படித்தான் இருந்துவருகிறது.

**16. ஓய்வுநாள் கற்பனை வாக்குரைக்கும் ஆசீர்வாதம் என்ன?**

**மத்தேயு 11:28.** *வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு ________________ தருவேன்.*



**யாத்திராகமம் 33:14.** *என் ________________ உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்.*

**எபிரெயர் 4:5.** *அவர்கள் ________________ ________________ பிரவேசிப்பதில்லை.*

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

**சிருஷ்டித்து, பரிசுத்தப்படுத்தும் தம் வல்லமைக்கு ஓர் அடையாளமாக ஓய்வுநாளை இயேசு கொடுத்திருக்கிறார். அவரைக் கனப்படுத்தும்விதத்தில் அந்தப் பரிசுத்த நாளை ஆசரித்து, அவருடைய ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொள்வீர்களா?**

**பதில்:** ________________________________

## துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

### அகராதி என்ன சொல்கிறது?

கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை எந்த அகராதியில் வேண்டுமானாலும் பாருங்கள்; அறிந்துகொள்ளுங்கள்.

சனிக்கிழமை - வாரத்தின் கடைசிநாளாகிய ஏழாம் நாள்
ஏழாம் நாள் - சனிக்கிழமை
ஞாயிற்றுக்கிழமை - வாரத்தின் முதல் நாள்
முதல் நாள் - ஞாயிற்றுக்கிழமை

### காலண்டர் மாற்றப்படவில்லையா?

**1582, அக்டோபர் மாதத்தில் ஒரு முறை காலண்டர் மாற்றப்பட்டது; ஆனால் வாரமுறையில் மாற்றம் செய்யவில்லை. 1582, அக்டோபர் 4 ஆம் தேதிக்குப் பிறகு காலண்டரிலிருந்து பத்துத் தேதிகள் நீக்கப்பட்டன. வெள்ளிக்கிழமை, அக்டோபர் 5 ஆம் தேதியானது, வெள்ளிக்கிழமை அக்டோபர் 15 ஆம் தேதியாக மாறியது. அந்த மாற்றத்தைக் கீழுள்ள படத்தில் காணலாம். வாரநாட்களின் வரிசையில் அது எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லையென்பதை நீங்கள் புரிந்துகொள்ளலாம்.**

| அக்டோபர் 1582 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
| | 1 | 2 | 3 | 4 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com